2. இரங்கல் தீர்மானம்

திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா, முன்னாள் அமைச்சர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.எஸ்.ஜே. சாதிக்பாட்சா, முன்னாள் அமைச்சர் அவர்கள் மறைவு குறித்த கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்.

"தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மற்றும் அன்றைய மேலவை உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான திரு.எஸ்.ஜே. சாதிக் பாட்சா அவர்கள் 12.5.1994 அன்று மறைவுற்ற செய்தி குறித்து இப்பேரவை மிகவும் வருந்துகிறது.

திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை மற்றும் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டைத் தொகுதியிலிருந்து இருமுறையும், 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை சென்னை மாவட்டம், ஆயிரம் விளக்குத் தொகுதியிலிருந்தும் மற்றும் 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டைத் தொகுதியிலிருந்தும் மொத்தம் நான்கு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றியுள்ளார்.

முற்பகல் 10.10

மேலும் 1983 ஆம் ஆண்டு முதல் 1986 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியுள்ளார். இது தவிர, 1967 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை பல்வேறு துறைகளுக்கும், மற்றும் 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை சட்டத் துறைக்கும் அமைச்சரராகப் பொறுப்பேற்று சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரது மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது".

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன் மூலம் தீர்மானம் நிறைவேறியது.)